# இலக்கிய வழியில்
# இனிய நறுமலர்

தொகுப்பு :
மயிலங்கூடலூர்
பி. நடராசன்

கலைப்பெருமன்றம்
அம்பனை
தெல்லிப்பழை
1972

பி. நடராசன்

# இலக்கிய வழியில்
# இனிய நறுமலர்

955

தொகுப்பு :
மயிலங்கூடலூர்
பி. நடராசன்

கலைப்பெருமன்றம்
அம்பனை
தெல்லிப்பழை
1972

அச்சுப்பதிவு :
முருந்தா அச்சகம்
தெல்லிப்பழை

# நுழைவாயிலில்........

இலக்கியச் சிறப்பை மரபுவழிநின்று திறனுய்வு செய்வதில் வல்லவர் எனப்புகழ் பெற்றவர் முதுபெருந் தமிழறிஞரான **பண்டிதமணியவர்கள்.** தமிழிலக்கிய விமர்சனத்துறையிலே தமக்கெனச் சிறந்த வழியைப் பயன்படுத்தி இமாலய வெற்றி கண்டுவிட்டவர் எனப்போற்றப்பெறுபவர் **கலாநிதி க. கைலாசபதியவர்கள்.** இவ்விரு பேராசிரியர்களும் ஈழத்துக் கவிதைக் காவிலே உலவி இலக்கிய வழியிலே இனிய நறுமலராகக் **காதலும் கருணையும்** என்ற நூலைக் கௌரவித்துள்ளனர். இம் மலர் **பார்வதிநாதசிவமவர்கள்** தமது கவிதைக்காவிலே தெரிந்தெடுத்த நறுமலராகும்.

வேறுபட்டமுறையில் இலக்கியத்தை அணுகும் இருவரின் கருத்துக்கள் சங்கமிப்பதைப் புலவரின் கவிதைகளிலே நாம் காண்கிறோம். கவிதைகளிலே காணப்படும் பன்முகத்தன்மையே கருத்துக்களின் சங்கமத்துக்குக் காரணமாகும்.

சங்ககால இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் போற்றின. பல்லவர்கால இலக்கியங்கள் பத்தியையும் அறநெறியையும் எடுத்துரைத்தன. காதல், வீரம், நாட்டுப்பற்று, பத்தி, அறநெறி, தீண்டாமை, பெண்விடுதலை, இயற்கை, பாட்டாளியின் உயர்ச்சி முதலிய அனைத்தும் நவீன இலக்கியப்பொருள்களாகின்றன. இவ்வியல்பைப் பாரதியாரின் பாடல்களிலே நாம் காண்கிறோம். சிலர் இவற்றுள் ஒன்றிரண்டை மட்டும் பாடற்பொருளாகத் தேர்ந்தெடுப்பது முண்டு.

குறிப்பிட்ட சிலவற்றை மட்டும் கவிதைப் பொருளாகக் கொள்ளாமல், காட்சிக்கும் கருத்துக்கும் உட்பட்ட அனைத்தும் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கவிதையாகப் படைப்பது எம் புலவரின் சிறப்பியல்பாக உள்ளது. தமிழ்,காதல்துறவு,பாட்டாளிகளின் அவலம் முதலிய அனைத்தும் இம்மலரிற் கவிப்பொருளாகிஇவரின் முழுமையான பார்வையைப் புலப்படுத்துகின்றன

சமூகத்திற் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளையும் பொது நிறுவனங்களிற் காணப்படும் ஊழல்களையும் கவிஞரின் மனித உள்ளம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை இத்தொகுதியிற் பரவலாகக் காண்கிறோம்.

பெருங் காவியங்கள் படைக்கும் நிலைமாறிச் சிறு காவியங்கள் தோன்றும்நிலை இன்றைய தமிழிலக்கியப் போக்குகளில் ஒன்றாகும். உணர்வையும் அறிவையும் மூலதனமாகக் கொண்டு கவி செய்வோர் அனைவரிடத்தும் இவ்வியல்பு பொதுவாகக் காணப்படுகிறது. இப்போக்கை இந்நூலிலும் காணமுடிகிறது. ''காதலும் கருணையும்'' என்ற தலைப்பிற் காணப்படும் சிறு காவியம் நவீனத் தன்மையுடன் பொலியக் காண்கிறோம்.

இத்தகைய சிறப்பியல்புகள் நிறைந்து காலக் குறியாக விளங்கும் காதலும் கருணையும் கவிதைத் தொகுதிக்கான சிறப்பு மலராக இச் சிறு நூலைப் பெருமையுடன் வெளியிடு கின்றோம்.

பண்டிதமணி சி. க. அவர்கள் உடல் நலம் தளர்ந்த நிலை யிலும் இம்மலருக்குக் கட்டுரை எழுதித் தந்துள்ளார்கள். அவர்களுக்கு எமது நன்றிகளை உரிமையாக்குகிறோம். கலாநிதி கைலாசபதி அவர்கள் தமது பல்வேறு வேலைகளுக்குமிடையே நூலைக் கருத்துடன் படித்துத் தமது கருத்தைக் கட்டுரையாக் கித் தந்துள்ளனர். கலாநிதியவர்களுக்கும் எமது நன்றிகள் உரியன. கிழக்கிலங்கை தந்த கவிமுதல்வராகிய கவிஞர் நீலா வணன் அவர்கள் தமது கவிதைமூலம் மலரைச் சிறப்பித்துள் ளார்கள். அவர்க்கும் யாம் நன்றியுடையோம்.

ஈழத்தின் சிறந்த நாடக ஆசிரியரும் கவிஞருமான திரு. செ. கதிரேசர்பிள்ளை, பழந்தமிழ் இலக்கியங்களிற் புலமைமிக்க கவிஞர் நா. ஆறுமுகம் ஆகியோர் தமது கருத்துக்களைச் சிறந்த கவிதையாக வடித்துள்ளனர். தரமான கட்டுரைகள் பலவற் றைத் தமிழ் உலகிற்கு அளித்துவரும் புலவர் வேல்மாறன், புலவ ரின் கவித்திறனை வெளிப்படுத்தும் வகையில் அரிய நிகழ்ச்சி யொன்றை எழுதியுள்ளார். இம் மூவர்க்கும் எமது நன்றிகள்.

இம்மலர் வெளியீட்டுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங் கியும், கட்டுரைதந்தும் பெருந்துணைபுரிந்தவர் யாழ்ப்பாணக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், நண்பர் ஆ. சிவநேசச்செல்வன் அவர்கள். அம்பனைக் கலைப்பெரு மன்றம் காதலும் கருணையும் என்ற கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவை நிகழ்த்து வதன் மூலம் ஓர் அரும் பணியை ஆற்றி உள்ளது. அவர்கள் தொண்டு வளர்க.

குறுகிய காலத்தில் இம்மலரைச் சிறப்புற அச்சிட்டளித்த முருந்தா அச்சகத்தினரை நன்றியுடன் பாராட்டுகிறோம்.

ஈழத்தின் மறுமலர்ச்சிக் கவிதையுலகின் முன்னோடியாக விளங்கிக் கவிதையில் நவீனத்தன்மையை அறிவுபூர்வமாகப் புகுத்தியவர் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்கள். பாவலரின் நூற்றாண்டு விழாக்காலத்தில் பூக்கும் இச்சிறு மல ரைப் பாவலர் அவர்களின் நினைவாகச் சமர்ப்பிக்கின்றோம்.

ம. பி. நடராசன்

"கூடலகம்"
மயிலங்கூடல்,
இளவாலை
14-5-72

# கற்பனை நிறைந்த காவியம்

சித்தாந்த சாகரம், பண்டிதமணி

## சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

'கல்லாமற் பாதி குலவித்தை' என்ற பழமொழியைப் 'பாதிக்கு மேலே' என்று திருத்தம் செய்தால் மஹாலிங்கசிவம் விஷயத்திற் சற்றே பொருத்தமாயிருக்கும்.

சிவத்தின் தாய்மரபு தந்தைமரபு இரண்டும் கல்விச்செல்வத்தின் நிறைகுடங்கள்; பொருட்செல்வத்திற்கும் குறைவில்லை. தாய்மரபு தமிழ்ப்புலமையிலும் சம்ஸ்கிருதப் புலமை விஞ்சியது.

தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் மூன்றிலும் இளமைப் பருவத்திலேயே நல்ல பயிற்சி உள்ளவர் மஹாலிங்கசிவம்.

கவிதை, கற்பனை, உரையாடல், உரைசொல்லல், உபந்நியாசம், கற்பித்தல் என்றிவைகள் சிவத்திற்குப் பிறப்புச் சொத்துக்கள். இவை ஒவ்வொன்றும் இலக்கியச்சுவை சொட்டிக் கொண்டு தனிச்சிறப்புறுவதைச் சிவத்தின்பாற் காணலாம். கண்டு களிக்கும் பாக்கியம் இளமைதொட்டு எனக்கு வாய்த்ததுண்டு.

மஹாலிங்கசிவத்தின் மைந்தன் புலவர் பார்வதிநாதசிவம். தந்தையின் அம்சம் மைந்தனிற் காணப்படுவது இயற்கை.

பார்வதிநாதசிவத்தின் கவிதைகள் பத்திரிகைகளில் வெளிவந்தவை. அவற்றிற் சிலவற்றைப் பார்க்க நேர்ந்தபோது படித்து மகிழ்ந்ததுண்டு. இப்பொழுது பத்திரிகைகளில் வெளிவந்தவை புத்தகவடிவில் வந்திருக்கின்றன.

மன்னுயிர் வாழ்தல் வேண்டி
வாழ்ந்திடும் உழவ ராலும்
இன்னுயிர் கொடுத்தும் நன்றே
இயற்றிடும் சான்றோ ராலும்
பொன்னினும் விருந்தை மேலாப்
போற்றிடும் மாத ராலும்
மன்னிய புகழ்சேர் ஊரூர்
மண்ணிடை விளங்கிற் றலோ

இக்கவிதை, காதலும் கருணையும் என்ற சிறுகாவியத்தின் முதற்கவிதை. இக்கவிதை என்னை வசிகரித்துவிட்டது. கருத்துக்கள், கருத்துக்கிரமம், சொல்லொழுக்கு, நடை என்றிவைகளால் நல்ல காவியப் பண்பின் மரபுபட்ட முத்திரையை வெளிப்படுத்தி, இக்கவிதை மிளிர்கின்றது. மேலும், காவிய மாளிகையின் முதற் கடைவாய்தலாய்க் காவிய ரசிகர்களைக் கைகாட்டியழைப்பதாய் உள்ளே சென்று உலா வரலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாய் அமைந்திருக்கின்றது.

அன்னமென அவள்நடப்ப வளைசு மந்தும்
அதுபற்றி வருந்தாவாய்க் கையி ரண்டும்
இன்னலெதும் இடைக்குவரு மோவென் றஞ்சி
இருபுறத்தும் காவலர்போல் அசையு மாண்பும்
புன்னகைசெய் திடுங்காலை முகத்தில் தோன்றும்
புத்தழகும் செங்கதிர்க்குக் கூசும் கண்ணும்
அன்னவள்போ யினள்எனினும் அகத்தின் கண்ணே
அழியாத ஓவியமாய் நிலைத்த வாலோ.

என்ற கவிதை, காவிய மாளிகையினுள்ளே உள்ளதொரு கற்பனை வளத்தை எடுத்துக்காட்டுவதோடமையாது இறுதியடி முதற்கவிதையினிறுதியடியோடு கைகோத்து, "குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ" என்று முடிகின்ற கலிங்கத்துப் பரணியடியையும் அதுபோல்வனவற்றையும் நினைவுகூரச் செய்கின்றது.

'காதலுக்குக் கண்ணில்லை' என்ற சாதாரண கிராமப் பழமொழியை மற்றொரு வகையில் அமைத்து, 'மடலேறுதல்' 'வரைபாய்தல்' என்ற அன்புத்துறைகளை ஒருவாறு அணுகச் செய்து, இல்லையாகின்ற கண்களிலிருந்து கருணைமழையை வருவித்துப் புதிய முறையில் நடக்கின்றது குறிப்பிட்ட இச்சிறு காவியம். இத்தொகுதியில் அமைந்த கவிதைகளனைத்தும் ஆற்றொழுக்கில் தங்குதடையின்றி நடப்பவை; அநாயாசமானவை. இவை இத்தொகுப்பின் தனிச்சிறப்பு.

★ ★ ★

# கனவும் நனவும் காட்டும் கவிதை

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்
**கலாநிதி. க. கைலாசபதி அவர்கள்**

எமது காலத்திலே ஆற்றல் வாய்ந்த கவிதை இயற்றும் கவிஞரை இருபெரும் பிரிவினராய்ப் பாகுபடுத்தலாம். பொதுவாகப் பழைய இலக்கிய மரபு வழிநின்று சொல்லினும் பொருளினும் அந்த மரபினைத் தழுவிப் பா இயற்றுபவர் ஒரு பிரிவினர். பழகுதமிழில் நிகழ்காலச் சமுதாய இயக்கங்களையும் மனித ஒழுகலாற்றினையும் கவிப்பொருளாகக் கொண்டு பாட்டல் இயற்றுபவர் இன்னொரு பிரிவினர். சுருங்கக்கூறின், கற்றோரைக்கருதிக் கற்றோர் எழுதும் கவிதை ஒருவகை. இலக்கியக் கல்வியினால் மட்டுமன்றி அனுபவம், உணர்ச்சி, உந்துதல் என்பவற்றின் பயனாக, ''ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி'' எழுதப்படும் கவிதை பிறிதொரு வகை.

முதற்கூறிய பிரிவிலே பெ. சுந்தரம்பிள்ளை, வெ. ப. சுப்பிரமணிய முதலியார், சோமசுந்தரப்புலவர், சுவாமி விபுலாநந்தர், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை முதலியோர் அடங்குவர். இரண்டாவது பிரிவிலே பாரதி பரம்பரையினர் என்று வசதிகுறித்து வழங்கப்படும் 'நவீன' கவிஞர்கள் இடம் பெறுவர். இப்பாகுபாடு எளிமை இசைவானதொன்றேயன்றி முடிந்த முடிபானதொன்றன்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்காலிலிருந்து உருவாகி வந்திருக்கும் 'நவீன' தமிழ்க்கவிதையின் இருபெரும் போக்குகளை இப்பாகுபாடு வரையறை செய்துகாட்ட உதவுகிறது என்றே கொள்ளல்வேண்டும். (இவ்விரு பிரிவுகளைச் சாராது, 'புதுக்கவிதை' என்ற பெயரில் இக்காலத்திலே இந்தியாவிலும் ஈழத்திலும் சிலர் சொற்சிலம்பம் செய்வர். இவர்களுடைய ''சொற்படிமங்கள்'' ஆண் பெண் அல்லாத அலிபோல, வசனமாயுமில்லை; கவிதையாயுமில்லை. இவற்றைக் கவிதைபற்றிய இக்கட்டுரையிலே நான் கணக்கிடவில்லை.)

முற்கூறிய இருபிரிவினரில் புலவர் ம. பார்வதிநாதசிவம் முதற்பிரிவைச் சார்ந்தவர் என்று கூறலாம். உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையின் பேரனும் பண்டிதர் வே. மகாலிங்கசிவத்தின் புதல்வனுமாகிய இவர் பழக்கத்தாலும் பயிற்சியாலும் சூழ்நிலைகளாலும் மரபுவழிப் புலவர் ஒருவராகவே விளங்குகிறார்.

பொது நோக்கிலே இவ்வாறு இவரை அடையாளங் கண்டுணர்ந்தாலும் - இனங்கண்டாலும் - அதற்குள்ளும், அம் மரபிலிருந்து வேறுபடும் சிற்சில அம்சங்களை இவர் கவிதை கள் காட்டி நிற்பதைப் புறக்கணிக்க இயலாது. குறிப்பாக எளிமையைச் சுட்டலாம். மரபு வழிவரும் இலக்கிய பரிச்சயம் உடையவராகையால், அவர், தானே விரும்பி ஏற்றுக்கொண் டிருச்கும் வரம்புக்குள் ஓரளவு எளிமையைப் பேண உதவு கின்ற விருத்தப்பாவைப் பெரிதும் கையாண்டுள்ளார். இடை யிடை கலிவெண்பாவும் காணப்படுகிறது. பார்வதிநாதசிவம் போல ஒரு வரம்புக்குள் நிற்கும் அதே வேளையில் காலப் போக்கினின்று விலகித் தனித்து நிற்காமல் இயன்றளவு அதை அனுசரித்தும் செய்யுள் இயற்றுவோர் பொதுவாகப் பயன் படுத்தும் யாப்பமைதிகள் இவை. இவற்றைக் கொண்டு உணர்வுபூர்வமான எளிமைத் தன்மையுடன் புலவர் பாடுவது கவனிக்கத் தக்கது.

இவ்விடத்தில் சோமசுந்தரப் புலவரது நினைவு எழுகின்றது. விளக்கவுரை வேண்டிநிற்கும் கடின நடையில் கவிதை யாத்த அதே நேரத்தில், எளிமை வாய்ந்த பாடல்களையும் சிறப்பாகச் சிறுவர்களுக்கெனப் பாடியவர் சோமசுந்தரனார்.

பார்வதிநாதசிவத்தின் கவிதைகளிலே காணப்படும் மற் றொரு பண்பு, அவர் தனது சொந்த உணர்வைச் செய்யுட் பொருளாக்கியிருப்பதாகும். நவீன தமிழ்க் கவிதையின் தலையாய பண்பு இது எனலாம். பாரதி பரம்பரையினர் பலர் பாடியுள்ள தன்னுணர்ச்சிப் பாடல்களின் அடிப்படையும் இது வேயாகும். பார்வதிநாதசிவத்தின் தொகுதியிலும் இப்பண்பு ஆங்காங்கு தலைகாட்டுகிறது. 'பந்தாடும் பாவை' 'காதல் நெஞ்சைக் கவர்ந்த காட்சிகள்' எனும் கவிதைகளில் இதனைக் காணலாம்.

இவரது பாடல்களில் நான் கண்டு சுவைத்த மற்றோர் அம்சம், சிலவிடங்களில் மென்மையாக இழையோடும் நகைச் சுவையாகும். மரபுவழி நின்று பாடிய பேராசிரியர் க. கணப திப்பிள்ளையின் பாடல்கள் சிலவற்றிலும் இப்பண்பு குறிப்பி டத்தக்கதாய் அமைந்துள்ளது. "மெல்லநகும்" என்ற தொ டர் குறிப்பதைப் போன்ற உள்ளடங்கலான நகைப்பு ஆசிரி யரது ஆளுமையின் வெளிப்பாடாய்த் தோன்றுகிறது. மரபுவழி வரும் அறத்துறைச் சார்புடைய செய்யுள்களிலே நகைப்புக்கு வாய்ப்பில்லை. அதற்கு மாறாக இவரது கவிதைகளில் - 'அபூர்வ வைத்தியர்', 'கொழும்பு நகரில் சிறு போழ்து', 'காதலை அங்கு கண்டேன்' முதலியவற்றில் கரவற்ற சிரிப்பைக் காணலாம்.

கல்லொடு மண்ணும் சேர்த்துக்
கடையினிற் செய்த தோசை
பல்லொடு செய்த போரிற்
பலத்ததோர் வெற்றி காண.........

காசைக் கொடுத்தும் காலையுணவை இழந்த நிலையில் ஆசிரியர் செல்வது நேர்மைத் தகவுடையதாய் இருக்கிறது.

அன்றாட வாழ்வில் நிகழும் சின்னஞ்சிறு விஷயங்களையும், அவற்றினடியாக எழுகின்ற மனச் சலனங்களையும் கவிதையாக்கிவிடும் திறத்தை இவரிடத்துக் காணமுடிகிறது. 'மெய்யின்பம்', 'உழைப்பும் பொருளும்', 'பொறி ஐந்தை வெல்ல அறிவொன்று போதுமோ' முதலியவற்றில் கருத்தார்ந்த பொருள்களைப் பாடும் கவிஞர், பொது வைத்தியசாலையில் மருந்து வாங்குவது, பஸ்ஸில் நெரிபடுவது முடிச்சுமாறியிடம் பணத்தைப் பறிகொடுப்பது போன்ற சாதாரணமான சம்பவங்களையும் கவிதைக்கேற்ற பொருளாய்க் கொள்கிறார். இத்தகைய கவிதைகளிலே பஸ், பில், லேடி முதலிய பிறமொழிச் சொற்களும் வருகின்றன. பாடற்பொருள் சொல்லாட்சியைத் தீர்மானம் செய்து விடுவதை இங்குக் காணமுடிகிறது. மொழி பற்றிக் கவிஞர் கொண்டுள்ள கருத்தையும் நாம் ஓரளவு அறிந்து கொள்ளக் கூடிதாய் இருக்கிறது.

எளிமை நலம் வாய்ந்த மென்மையான நகைச்சுவையும் சின்னஞ்சிறு விஷயங்களைக் கவிதையாக்கும் போக்கும் நவீன கவிஞரில் ஒருவரான 'மஹாகவி' யிடத்தும் சிறப்பாயமைந்திருந்தது. இருவருக்கும் சிற்சில ஒற்றுமைகள் உள்ளன எனலாம்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது, பார்வதிநாத சிவம் புலமைமிக்க கவிஞர் பரம்பரையினர்தான். ஆயினும், அவரது ஆக்கங்களில் பிரதிபலிக்கும் முரண்பாடுகளும் வேறுபாடுகளும் காலத்தின் போக்கிலிருந்து பலவந்தமாகத் தன்னைத் தனிமைப்படுத்தாத ஒருவரின் ஏற்புடைமையை - மாறுபாடுகளையும் பதிவுசெய்து காட்டக்கூடிய நேர்மையை - நிரூபிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

இறுதியாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தியாவிலும் ஈழத்திலும் இன்று கவிதையுலகிற் காணப்படும் 'ஒலிமாயம்' 'ஒலிமூறிவு', 'பொருள் இருண்மை' முதலிய நிலையிழிபுற்ற அம்சங்கள் மருந்துக்குக் கூடக் காணப்படாமையே இத்தொகுதியின் தலையாய சிறப்பியல்பு ஆகும். கவிதையை மலினப்படுத்தாதிருப்பது கூடப் பாராட்டுக்குரிய இலக்கிய சாதனை என்பதற்கு இந்நூல் நல்லசான்று.

# சொல்லுழவாற் பயன் தருக!

கவிஞர் நா. ஆறுமுகம்

சொல்லமுத சுரபியெனக் கற்பனைத்தேன் கலந்தகவி
சொரிந்தின் பூட்ட
வல்லமகா லிங்கசிவப் பேராசான் மரபுவழி
வாழ வந்தோன்
நல்லவன்பார் வதிநாத சிவப்புலவன் தமிழ்ப்பண்பே
நயக்கு மன்பன்
எல்லவர்க்குங் காதலுடன் கருணைமிக வோர்சிறுகா
வியமே யீந்தான்

மெய்யின்பங் காட்டுதமிழ்க் கடல்முகந்த கொண்டலென
விளங்கி வையம்
பொய்யின்பத் துழலாத முயற்சிதரு மானந்தம்
பொலியக் காட்டித்
தெய்வத்தின் கருணைதனை யேழைகளின் கண்ணீரிற்
றெளியச் செய்தே
செய்கின்ற புறவழகிற் காணுத விலக்கியமே
சேர்த்துத் தந்தான்

உண்மைநகை வீரமிகு முறுதிவழி யுவப்பூட்டு
முயர்ந்த ஞானம்
பெண்மைதனின் சத்திமன நிறைந்தசெயல் வீரமிவை
பெரிதே யென்னுந்
திண்மையுறு பொருள்பொதிந்த செந்தமிழின் சீர்வியக்கும்
புலமை சான்ற
வண்மைமிகு கவிபலவு மீந்துலகு நயத்தகுநா
கரிகம் வாய்ந்தோன்

கல்லொடு கலந்துவரு பாதையிலுங் கண்ணியமே
பேணிக் காக்க
வல்லவழி நாட்டுகவி வையகத்தை வாழவைத்தே
வளஞ் சுரக்கும்
சொல்லுடனே செயலொருமைப் பாடுமிகத் தொண்டுபுரி
தூயன் பண்ணுட்
சொல்லுழவாற் பயன்றருக! சோபனமே பெற்றுநலந்
துய்க்க நன்றே.

# கவி அரங்கில் புலவர்

புலவர், வித்துவான், பி. வேல்மாறன்

1958 ஆம் ஆண்டின் இடைப்பருவ நாளில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் நடு ஆலயமாய் வானளாவ எழுந்துள்ள சாஸ்திரியார் மண்டபத்தினுள் மகாவித்துவான், புலவர்மணி அருணசலம்பிள்ளை அவர்களின் தலைமையில் கவிஞர் பலரின் கவிதா முழக்கம் தேன்மழையாய்ப் பொழிந்து கொண்டே இருந்தன.

அந்நாள், எனக்கோ பல்கலைக் கழக வாழ்க்கையின் ஆரம்பநாளாக இருந்ததால் எல்லோரும் புதியவராயும் புது மையாளராயும் விளங்கினர்.

மேடையில், நெட்டையாய் மெலிந்து வளர்ந்துள்ள ஒரு வர் தன் வெண்கலக்குரலில் ஆற்றொழுக்காய் - அலையலை யாய் - அடுக்கடுக்காய் - காவியச் சுவை நிரம்பிய கவிதை களைப் படிக்கத் தலைப்பட்டார்!

அவர் யாராக இருக்கலாம்? இக்கேள்விக்குரிய விடை யை, அக்கவியரங்கத்தின் தலைவரே - பேராசிரியரே - தன்முடி வான நயவுரையில் தந்தது அவரை யார் எனப் புரிந்து கொள்வதற்குச் சுலபமாகிவிட்டது.

"மொழியை ஆழ்ந்து கற்ற எவரும் கவிஞர் ஆவதில்லை. அவருள் ஒரு சிலர்தாம் கவிஞருள் கவிஞராய்த் திகழும் கவிதா சக்தியாளராய்க் காலத்தை வெல்லக் கூடிய அளவுக்கு விளங்குகின்றனர்.

அவ்வாறு விளங்குவோருள் பார்வதிநாதசிவம் அவர்கள் சிறந்த ஒரு இடத்தைப் பெற்றுள்ளார்".

---

## கலைவிருந்து வைத்தான் கவி!

கவிஞர் நீலாவணன்

பார்வதி நாத சிவம்புலவர் பாக்களினை
ஓர் நூலாய் அச்சில் உருவாக்கிச், சீருடனே
இன்று வெளியிடு கின்றார்கள் என்றறிந்து
நன்று மகிழ்ந்தனமே நாம்.

தமிழை வளர்த்த மரபினிலோர் சான்றோன்
அமிழ்தம் அனையகுணத் தன்பன், தமிழென்று
இலைகூளம் வைக்கோல் இவைவிற்கும் இன்று
கலைவிருந்து வைத்தான் கவி!

வாழ்த்துகிறோம் ஓர்புலவன் வாக்கிலொளி உண்டாமேல்
வாழ்த்தும் உலகுமது வாழுவரை, காத்திருந்த
வாசகர் காதல் கருணையும் வாய்க்குமென்று
பேசுவதில் உண்டோ பிழை.

## கருத்திலங்கும் கவிதை

கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

நீதிகள் நாட்டியுந் தீதுகள் வீட்டியும்
நெஞ்சகத் தறமென்பதோர்
நேர்மைதிலை நின்றிடக் கூர்மைமதி யோடுதன்
நிகரிலாப் புலமைகாட்டி
ஓதுதற் கெளிமையும் நிறைபொருட் செழுமையும்
உற்றசெஞ் சொற்களாலே
ஒழுகிசைத் தொடையிலே உயர்கின்ற நடையிலே
ஒருதமிழ் மரபுகாத்துக்
காதலுங் கருணையும் என்றவொரு கற்பனைக்
காதையோ டுணர்ச்சிகூட்டும்
காட்சிகளி னுளத் தாட்சிபெற் றோங்குபல
கருத்தையுங் கவிதைசெய்து
பூதலம் வாழ்த்திடத் தமிழன்னை ஏத்திடப்
புதியநூ லொன்றளிததான்
புலவர்பார் வதிநாத சிவம்இவன் பணித்திறம்
பொலிகெனப் போற்றுவோமே.

# புலமை வழிவந்த புதல்வர்

ஆ. சிவநேசச்செல்வன் பீ. ஏ.[ஆனர்ஸ்]
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

''.........யாழ்ப்பாணம் என்னும் நந்தவனத்தின் நடுவிலே, மட்டுவில் என்னும் தேனூர் பூங்கொடியிலே அலர்ந்து, 'மங்கலமாகி இன்றியமையாது யாவரும் மகிழ்ந்து மேற்கொள்ளும்', மென்னீர்மை எய்தி நாடெங்கும் நன்மணங் கஞற்றிச் செஞ்சொல்லாகிய இன்மதுப் பொலிந்த ஒரு செல்வ நறுமலர்'' பரீட்சை எடாத பண்டிதர் குருகவி வே. மகாலிங்கசிவம் அவர்கள். ''இவர் மட்டுவிற் பூங்கொடியிலே தனித்து அலர்ந்த மலரல்லப் பல மலர்களிடையே தோன்றிய சிறந்த மலரெனச்'' சுவாமி விபுலானந்தர் வாயாரப் புகழ்ந்துள்ளார்கள்.

'கண்ணுவ ரிஷியின் ஆச்சிரமத்திலே காளிதாச மகாகவி வர்ணிக்கின்ற இளம் மான்கன்றுபோல மகாலிங்கசிவம் என்கின்ற பச்சை இளம் கலை மான்கன்று துள்ளிக்குதித்து விளையாடி வளராநின்று' கவி சொரிந்த காட்சியைப் பண்டிதமணி அவர்கள் இனித்து இனித்துக்கூறிக் கொண்டாடியுள்ளார்கள்.

கண்ணுவர் கூற்றாக வரும் ''மங்கையிவள் செலும்வழியில் நறுந்தருக்கள் மலிக'' என்று தொடங்கும் பாடல் அவரது கவிதைத் தேன் மாரியின் சிறுதுளி. அவரது கவிதையுள்ளத்தின் அகலத்தையும் மாட்சியையும் விளக்கும் கவிதைகளையும், கட்டுரைகளையும் தமிழ்கூறும் நல்லுலகம் பெறுவதற்குக் கொடுத்துவைக்கவில்லை. அருமருந்தன்ன பாடல்களை இரசித்து இனித்த பண்டிதமணி அவர்களே அவரது பாடல்களை மடியோடு மடியவிட்ட மடியை நினைந்து மனங்கவன்றுள்ளார்கள்.

''புலமை நிரம்பிய உள்ளம், தன்பெருமை எண்ணாத எளிவந்த சுபாவம், சதா கவியுலகிற் சஞ்சரித்து இன்புறுதல் இவற்றையெல்லாம் ஊடுருவி நிற்கும் பக்தி,'' இவை நான்கும் மகாலிங்கசிவத்தின் தனிப்பண்புகள்.

புலமை வழிவந்த அவர் புதல்வரின் பாடல் மூலம் தந்தையின் சாயலை உணர முடியும் என்ற அருட்டுணர்வுடன் ''காதலும் கருணையும்'' என்ற கவிதைத் தொகுதியின் பக்கங்களைப் புரட்டினேன். நம்பிக்கை வீண்போகவில்லை; நிறைவே ஏற்பட்டது.

தன்னுணர்ச்சிப் பாடல்களாகப் பெரிதும் அமைந்துள்ள இத் தொகுதியிற் காணும் கவிஞரின் ஆழ்ந்த தமிழுணர்வு மனங்கொள்ளத்தக்கது. "உன் நடையைக் காலமெல்லாம் நோக்கும்ஆசை ஒன்றுலே துடிக்கின்றேன் என்நெஞ்சில் நடந்தின்பம் உதவும்தேனே"எனத் தமிழ்ப் பாவையை ஆர்வம் ததும்பும் உள்ளத்தால்அழைக்கின்றுர்.

புலவர் பார்வதிநாதசிவம் அவர்களிடம் நேரிற் பழகுபவர்கள் உணரும் மென்மை, இனிமை, கனிவு, குழைவு போன்ற உணர்வுகள் கவிதைத் தொகுதியில் இழையோடுவதையும் குறிப்பாக வல்லினம் எவ்வளவுதூரம் ஒதுங்கியுள்ளது என்பதையும் உணர முடிந்தது.

வாழ்வியல் அனுபவங்களைப் போதனை மனப்பாங்குடன் கூறுவது இத் தொகுதியின் தனிப்பண்பு. தமது உள்ளுணர்விலே தோன்றிய கருத்தை வெகுலாவகமாக, எளிய சொற்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ள கவிசாதுரியத்தை வியக்காமல் இருக்க முடியாது. வாழ்வியல் அனுபவங்களின் பகைப்புலத்திற் போதனை மனோபாவம் துலங்குவது தனிச்சிறப்பு.

சாதாரண அனுபவங்களைப் புலவர் முகஞ்செய்து கூறும் முறை இயல்பாக உள்ளது. கவிதை உருவம் இயல்பாகவே அமைவதும் கவனிக்கத்தக்கது. மனித உணர்வுகளை மெதுவாகத் தொட்டுக் காட்டுகின்றுர். இருபதாம் நூற்றுண்டு மனிதன் மிகவும் பரிதாபத்திற்குரியவன். இன்றைய எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் சமூகத்தை அனுதாபத்தோடு நோக்கும் போக்கு அவசியம். சதா கேள்விக் குறிகளை எழுப்பிப் பொறுப்புணர்ச்சியற்ற முறையிற் கேலிசெய்வது விரும்பத்தக்கதல்ல, புலவர் பார்வதிநாதசிவம் அவர்களின் கவிதை உணர்வூடே வெளிவரும் சில சமூக உணர்வுகள் மென்மையாக மனித மனத்தில் அருட்டுணர்ச்சியை ஏற்படுத்தக்கூடியவை.

பழைய இலக்கியப் போக்கிலே ஆழ்ந்தமையின் பிரதிபலிப்பு புதிய வேகத்துடன் வெளியாவதையும் அவதானிக்கலாம். எவனை நினைந்தாளோ?, நீராடல் போன்ற பாடல்கள் இவ்வகையின. அகப்பொருள் இலக்கியத்தின் தொனிப்பொருள் கவிப் பொருளாகும் அமைதியினையும் காணலாம். காதலுணர்வினூடே சமூகத்தில் வறுமையால் வாடும் ஏழைகளின் பிரச்சினையையும் நோக்குகின்றுர் புலவர்.

பஞ்சையர்கள் தெருவினிலே படுக்கின்றுர்
நமக்குமட்டும் பகட்டு வாழ்வா?

என வரும் அடிகள் புலவரின் சமூக உணர்வைக் காட்டுவன. கொடுப்பதிலே இன்பம் காண்போம் என்ற கவிதை புலவரின் ஆழ்ந்த உள்ளுணர்வை வெளிக் கொணர்கிறது.

பட்டுடைக்கே ஒய்வளிப்பாய் பருத்தியையே
இனியுடுப்பாய் பாரில் கந்தல்
கட்டுபவர் உள்ளவரை நாமுடையைக்
குறைத்திடுவோம் கருணை வெள்ளம்
கொட்டுகின்ற நெஞ்சுடையாய் வா ! பிறர்க்குக்
கொடுப்பதிலே இன்பம் காண்போம்
இட்டமிலார் வேண்டுமட்டும் சேர்க்கட்டும்
இதயமுளோய் கொடுப்போம் இன்னே.

என ஏழைகளுக்கும் பசிதீர்க்கக் கொடுப்போம் என்ற ஆவலோடு பாடுகின்றார்.

அபூர்வ வைத்தியர், கொழும்பு நகரில் சிறிது போழ்து ஆகிய இருபாடல்களிலும் அமைந்துள்ள இலேசான நகைச்சுவையும் அதனூடே குத்திட்டு நிற்கும் சமுதாயப்பார்வையும் குறிப்பிடத் தக்கவை. நசுக்காகக் கிண்டல் கலந்திருப்பது சுவையை அதிகரிக்கச் செய்கின்றது. 'மஹாகவி' யின் 'யாழ்ப்பாணம் போவேன்' என்றபாடலை நினைவூட்டுகின்றது.

நாயொன்று வாலை ஆட்ட
நன்கனம் பூனை கத்த
ஈயெலாம் இலையில் வீழ
இருந்திட்டேன் என்னை நோக்கி
நோயெலாம் சமயம் பார்க்கும்
நுட்பமும் அறிந்தேன்…… …

என்ற அடிகளில் புலவரின் இலேசான நகைச்சுவையைக் காணலாம்.

முழுமையாகப் புலவரின் பாடல்களில் அமைந்துள்ள ஒழுகிசை தொகுதிக்கு மெருகூட்டுகின்றது. குறிப்பாக 'பந்தாடும் பாவை' என்ற பாடலில் ஓசையும் சொல்லாட்சியும் மனங்கொள்ளத்தக்கவை. திருக்குற்றலக்குறவஞ்சியில் வரும் வசந்தவல்லி பந்து பயின்ற காட்சி நினைவுக்கு வருகின்றது. கம்பர் கவிதைகளிற் காணப்படும் கவிதை வேகம் தொனிக்கிறது. பழைய இலக்கியப் பயிற்சி காரணமாக இயல்பாகவே சங்க இலக்கியச் சொற்கள் தொகுதி முழுவதும பரந்து கிடக்கின்றன.

கவிதை இலக்கிய மரபிலே குறிப்பிடக் கூடிய நல்ல கவிதைத் தொகுதியைப் புலவர் பார்வதிநாதசிவம் அளித்துள்ளார்கள். இஃது ஈழத்து இலக்கிய வழியிலே ஒரு நல்ல கவிமலராகும்.